"THE HINDO TAMIL"

PAGE NO : 05

DATE : 23.12.2021

புரதங்களின் மாற்றங்கள் தொடர்பான ஆராய்ச்சிக்கு

# ரூ.3.6 கோடி ஆய்வு நிதி பெற புதுச்சேரி பேராசிரியர் தேர்வு

■ புதுச்சேரி

புரதங்களில் வேதியியல் மாற்றங்கள் தொடர்பான ஆராய்ச்சிக்கு ரூ. 3.6 கோடி ஆய்வு நிதியை பெற புதுச்சேரி பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் அருண்குமார் தயாளன் தேர்வாகியுள்ளார்.

'டிபிடி- வெல்கம் டிரஸ்ட் இந்தியா அலையன்ஸ்' (DBT/ Wellcome Trust) நிறுவனமானது உடல்நலம் மற்றும் உயிரியல் மருத்துவ அறிவியல் பிரிவில் உயர்தர ஆராய்ச்சி செய்ய விரும்பும் ஆராய்ச்சியாளர்களுக்கு ரூபாய் 3.6 கோடி வரையிலான ஆய்வு நிதியை வழங்குகிறது.

'ஹிஸ்டோன்கள்' எனப்படும் குறிப் பிட்ட புரதங்களில் ஏற்படும் வேதியியல் மாற்றங்களின் கலவையானது மரபணுக் களின் வெளிப்பாட்டை முறைப்படுத்துகிறது.

இத்தகைய வேதியியல் மாற்றங்களின் ஒன்றான ஹிஸ்டோன் அர்ஜினைன் மாற்றங்கள் எவ்வாறு அங்கீகரிக்கப்படுகின்றன என்பதை அறிவது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக டாக்டர் அருண்குமார் தயாளன் இன்டர்மீடியட் பெல்லோ ஷிப் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் ஆய்வு நிதியை இவர் பெறுவார்.

புதுச்சேரியை சேர்ந்த டாக்டர் அருண்குமார் தயாளன், புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறையில் தனது முதுகலை பட்டத்தை பெற்றார். பின்னர், ஜெர்மனியில் உள்ள ஜேக்கப்ஸ் பல்கலைக்கழகத்தில் முனைவர் மற்றும் முனைவர் பட்டத்திற்கு பிந்தைய ஆராய்ச்சி படிப்புகளை முடித்தார். தற்போது, புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் உயிர் தொழில்நுட்பத் துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

தேர்வாகியுள்ள பேராசிரியரை பல் கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வாழ்த்து தெரிவித்தார்.



▲ புரத ஆராய்ச்சிக்கு தேர்வாகியிருககும் பேராசிரியர் டாக்டர் அருண்குமார் தயாளனை பல் கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.